# கிறிஸ்தவத்தின் முதல் 400 ஆண்டுகளில் அதன் வளர்ச்சி

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் H4b1 பாடத்தை வாசிக்கவும

## 1. உங்கள் மந்தைக்கு கிறிஸ்தவத்தின் வரலாற்றை போதிக்க உங்களை ஜெபத்தாலும் வார்த்தையாலும் ஆயத்தம் செய்து கொள்ளவும்.

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, நீர் இந்த உலகத்தில் என்ன செய்து கொண்டு இருக்கிறீர் என்பதை வரலாற்றின் மூலம் நாங்கள் கற்றுக்கொள்ள உதவி புரியும்."

**குறிப்பு:** இயேசு மரித்து உயிர்த்தெழுந்த முதல் 400 ஆண்டுகளில், ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் ரோம சாம்ராஜ்யத்தின் ஆட்சியின் கீழ் இருந்து பெரும்பாலான நகரங்களிலும் பிரதேசங்களிலும் கிறிஸ்தவ நம்பிக்கை பரவியது. அநேக வேளைகளில் ரோம அதிகாரிகள் கிறிஸ்தவர்களுக்க விரோதமாக எழுந்து அவர்களில் பலரைக் கொன்றனர். இருந்தாலும், இயேசு கூறிய படியே, இயேசுவைப் பற்றிய நற்செய்தி தொடர்ந்து பரவிக் கொண்டே இருந்தது.

இயேசு தமது சுவிசேஷத்தைப் பற்றி என்ன கூறினார் என்பதை மத். 24:14; 28:18; அப். 1:8 ல் காண்க.

- நற்செய்தியை எந்த தேசத்தாரும் ஜனங்களும் கேட்பார்கள்? (மத். 24:14).
- உலகத்தின் முடிவுக்குள் என்ன நடக்க வேண்டும்? (24:14).
- பிற மக்கள் கூட்டத்தாரிடையில் விசுவாசிகளாகி நம்மை அனுப்பும் அதிகாரம் யாருக்கு உண்டு? (28:18).
- இயேசுவின் சீஷர்களை உருவாக்க நாம் எங்கே செல்ல வேண்டும் (28:19)
- நற்செய்தி எந்தக் காலம் வரையிலும் பரவிக்கொண்டே இருக்கும்? (28:20).
- சாட்சிகளாக எங்க செல்ல வேண்டும் என்று இயேசு கூறினார் (அப். 1:8).

ஊழியர்கள் இல்லாமலேயே கிறிஸ்தவம் எவ்வாறு பரவியது என்பதை அப். 7:59- 8:5 ல் காண்க.

- ஸ்தேவான் போன்ற சில கிறிஸ்தவர்களுக்கு என்ன நேர்ந்தது? (7:59, 60).
- எருசலேமில் உள்ள சபைக்கு என்ன நேர்ந்தது? (8:1)
- கிறிஸ்தவர்கள் எங்கே சென்றனர்? (1)
- வீடுகளில் கூடிய சபை அங்கத்தினர்களுக்கு சவுல் என்ன செய்தான்? (3)
- வேறு நகரங்களில் கிறிஸ்தவர்கள் என்ன செய்தார்கள்? (4 & 5).


**குறிப்பு:** சவுல் பின்னர் ஒரு கிறிஸ்தவராகவும், ஊழியராகவும் மாறினார். அவரது பெயர் பவுல் என்று மாறியது. பாடுகள் இரண்டு விதமானவைகள்: வெறுப்பு மண்டிய மக்களால் செய்யப்படும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமான வன்முறைக் குற்றமும், இயேசுவை நேசிப்பதால் கிறிஸ்தவர்கள் அடையும் சட்டபூர்வமான துன்பங்களும்.

ஊழியர்கள் எவ்வாறு கிறிஸ்தவத்தைப் பரப்பினர் என்பதை அப். 14:21-23 ல் காண்க:

- எத்தகைய இடங்களுக்கு ஊழியக்காரர்கள் சென்றனர் (21).
- அந்தப் பட்டிணங்களில் அவர்கள் என்ன செய்தனர்? (22).
- அவர்களது பிரசங்கத்தின் செய்தி என்ன? (23)
- ஒவ்வொரு பட்டிணத்திலும் எத்தகைய புதிய சமுதாயத்தை அவர்கள் ஆரம்பித்தனர்? (23)
- அத்தகைய புதிய சமுதாயத்தை எப்படிப்பட்ட தலைவர்கள் வழிநடத்தினர்? (23).

தனது ஊழியத்தைப் பற்றி அப்போஸ்தலர் பவுல் என்ன எழுதினார் என்பதை **ரோமர் 15:18-21** ல் காண்க.

- கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்தவர்களாக மாறியவர்கள் யார்? (18)
- பவுலின் நடவடிக்கைகள் என்ன? (19)
- எருசலேமில் இருந்து அவர் எங்கு சென்றார்? (19)
- எத்தகைய இடங்களுக்கு அவர் தேடிச் சென்றார்? (20)
- புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு தேவன் அளித்துள்ள வாக்குத்தத்தம் என்ன? (21)




இயேசுவைப் பற்றிய நற்செய்தி ரோம சாம்ராஜ்யத்தின் எல்லா பகுதிக்கும் பரவியது. கிறிஸ்தவர்கள் கைதிகளாகக் கொண்டு போகப்பட்ட போது அது அடுத்த நாடுகளுக்குள்ளும் பரவியது. அவிசுவாசிகளான அதிகாரிகளால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டாலும், பெரும்பான்மையான சாம்ராஜ்யப் பகுதிகள் கிறிஸ்தவத்துக்குள் வந்தது. ஏனெனில்:

- கிறிஸ்தவர்கள் கருக்கலைப்பை எதிர்த்து, பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தனர்.
- கிறிஸ்தவர்கள் சிசுக்கொலையை எதிர்த்ததால், நிறைய குழந்தைகளை உடையவர்களாய் இருந்தனர்.
- கிறிஸ்தவர்கள் நோயாளிகளைப் பேணி, பலர் வாழ உதவினர்.
- கிறிஸ்தவர்கள், பெண்களை மதித்து, அவர்களுக்கு கண்ணியத்தையும் பாதுகாப்பையும் அளித்தனர்.
- கிறிஸ்தவர்கள், விதவைகளையும், அனாதைகளையும் பேணினர்.
- கிறிஸ்தவர்கள், சமுதாய ஒற்றுமையை பேணி, நகர மக்களை ஒன்றிணைத்தனர்.
- கிறிஸ்தவர்கள், திருமண உறவை உண்மையோடு காத்து, குழந்தைப் பேற்றையும், நீண்ட ஆயுளையும் வளர்த்தனர்.
- கிறிஸ்தவர்கள், உயிர்களை மதித்து, மானிட கண்ணியத்தை உயர்த்தினர்.
- கிறிஸ்தவர்கள், புதிய ஏற்பாட்டை பின்பற்றி, கிருபையினாலும் பரிசுத்த ஆவியானாலும் வாழ்ந்தனர்.

## உல்பாவும் கோத்தியர்களும் (Ulfas and the Goths)

முதல் நூற்றாண்டுகளில், ரோமர் அல்லாத மக்கள் ரோம சாம்ராஜ்யத்துக்குள் நுழைந்து குடி அமர ஆரம்பித்தனர். கோத் தேசத்து கொள்ளையர்கள் உல்பா என்ற ரோம நாட்டவனை சிறைபிடித்து, ரொமேனியா நாட்டு தானுபே ஆற்றின் கரையில் இருந்த பகுதிக்குக் கொண்டு போயினர். அங்கே அவன

ஒரு கிறிஸ்தவனாக மாறினான். பின்னர் கோத்தியர்கள் அவனை அனுமதித்ததால், அவன் படித்து, துருக்கியில் உள்ள கான்ஸ்டான்டைன் நோபிலில் ஒரு பேராயராக திருஅமர்வு பெற்றான். பின் உல்பா கோத்தியர்களிடம் திரும்பி வந்து அவர்களைப் போலவே வாழ்ந்து, ஒரு வண்டியில் நகரம் நகரமாகச் சென்று நாற்பது ஆண்டுகள் சுவிசேஷம் அறிவித்தான். கி.மு. 382 ல் அவன் சாகுமுன், கோத்தியர்களுக்கு ஒரு நெடுங்கணக்கும் (alphabet), ஏறத்தாழ முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட ஒரு வேதாகமத்தையும் கொடுத்தான். கி.மு. 410 ல், கோத்தியர்கள் ரோமப் பேரரசை வென்றடக்கியபோது, அவர்கள் பெரும்பான்மையும் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். புறஜாதியார்கள் கூட, கோத்தியர்களைப் பற்றி பேசும் போது, அவர்கள் மற்றவர்களின் சொத்தைப் போற்றினர், மிகுந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருந்தனர் என்று கூறினர்.

## கி.மு. 313 வது வருடம்

கி.மு. 300 ல், சாம்ராஜ்யத்தில், ஏராளமான கிறிஸ்தவர்கள் இருந்ததால், ரோம அரசாங்கம் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதை நிறுத்துவது எனத் தீர்மானித்தது. பேரரசர் கான்ஸ்டான்டைன் "சகிப்பு பிரகடனத்தை" வெளியிட்டு கிறிஸ்தவத்தை சட்டபூர்வமான மதம் ஆக்கினான். இது கிறிஸ்தவத்தின் மேல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது.



- அநேக அவிசுவாசிகள் சபையில் சேர்ந்தனர். சபை உயிரற்றதாக மாறியது.
- கிறிஸ்தவ சபைகள் ரோம கலாச்சார வடிவங்களைத் தழுவிக் கொண்டன.
- ரோம பேரரசுக்கு உட்படாத நாடுகள் தங்கள் நாட்டு கிறிஸ்தவர்களை துரோகிகளோ என்று சந்தேகப்பட ஆரம்பித்தது.
- ரோம கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டால் மட்டுமே ஞானஸ்நானம் என்று சபைத்தலைவர்கள் கூறினர்.
- இறையியல், அரசியல் அதிகாரம் குறித்து சபைத்தலைவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

## 2. வரும் வாரத்துக்கான நடவடிக்கைகள் குறித்து உடன் ஊழியர்களுடன் விவாதிக்கவும்

பகுதி 1 ல் உள்ள முதல் 400 ஆண்டுகள் என்ற பகுதியின் செயல்பாடுகளை இணைந்து வாசிக்கவும். இதில் இருந்து ஒன்றோ இரண்டோ செயல்பாடுகளை தேர்ந்தெடுத்து, உங்கள் சமுதாயத்தில் இது போன்று எவ்வாறு செய்வது என்று நீங்களும் உங்கள் விசுவாசிகளும் திட்டமிடுங்கள்.

புதிய மேய்ப்பர்களை சந்தித்து பழைய சபை வரலாறு பற்றி இந்தப் பாடத்தின் மூலம் போதிக்கவும். அல்லது அவர்கள் விரும்பும் இன்னொரு பொருள் குறித்து கற்பிக்கலாம். PTLT பயன்படுத்துவோர் பட்டியலை உபயோகியுங்கள்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

கிறிஸ்தவத்தின் முதல் 400 ஆண்டு கால வரலாற்றில், அப்போஸ்தலர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எவ்வாறு பரப்பினர் என்றும், விசுவாசிகள் எவ்வாறு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டனர் என்றும், பகுதி 1 ல் கூறப்பட்டுள் வசனங்கள் கூறுவதை விசுவாசிகள் வாசிக்குமாறு செய்யவும்.

- நற்செய்தியை எவ்வாறு அறிந்து கொண்டனர் என்பதைப் பற்றி விசுவாசிகள் **சாட்சி** கொடுக்கட்டும்.
- பிள்ளைகள் தாங்கள் தயாரித்த **நாடகத்தை** வழங்கட்டும்.
- வெளி. 3:20 ஐ வாசித்து, "கதவு" பற்றி சுருக்கமாக விவரித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும்.
- **மனன வசனம்** (சேர்ந்து) மத். 24:14.
- திட்டமிடவும், ஜெபிக்கவும், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும், இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களாக** பிரியவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net